உ
சிவமயம்



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும்
திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
# அப்பாத்துரை சித்திரவேலாயுதம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**08.12.2015**

உ
சிவமயம்

# உங்கள் பாதமலர்த் திருவடிக்குச் சமர்ப்பணம்

எங்கள் குடும்பப் பெருவிருட்சத்தின்
ஆணிவேராக இருந்து, எம்மவரின் உயர்வுக்குத்
தன்னை தியாகம் செய்து, அணையாத
ஜோதியாய் நாம் அறிந்த நாள் முதலாய்,
அன்போடு அரவணைத்து, கள்ளம் கபடமற்ற
அன்புடனும், என்றும் மாறாத புன்
சிரிப்புடனும், எம்மையெல்லாம் வழி
நடத்தி, வளமான வாழ்வு தந்து,
யாவரையும் இன்முகத்துடன் வரவேற்கும்
உயரிய பண்பு கொண்ட, எங்கள்
குடும்பத்தின் குலவிளக்காய் அவதரித்த
எம் தெய்வத்திற்கு இம்மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்

# பஞ்சபுராணம்



### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருவு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

### தேவாரம்

நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பும்
    நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
    வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
    அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
    கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

மாறிநின்றென் னைமயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
யூறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
யுள்ளவாகாண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறைசிவனே
ஈறிலாப் பதங்கள்யாவையுங்கடந்த
இன்பமே யென்னுடையன்பே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென்கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங்கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கல்லாலின் படையமர்ந்து நான்மறையா
    றங்குமுதற் கற்ற வேள்வி
வல்லார்கணால்வருக்கும் வாக்கிறந்த
    பீரணமாய் மறைக் கப்பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
    இருந்த படி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து
    பவத் தொடக்கை வெல்லாம்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
    ஒண்கடலிற் றேனமுதற் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
    என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
    தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
    ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

"SIVAGAMA SITHANTHA GNANATHESIGA BANU"
"PIRATHISHDALANKARA SITHANTHA SAAKARAM"
"PIRATHISHDA SIROMANI"
"SRI SUBASVARAM"
SIVASIRI SOMASKANTHA THANDABANIKA THESIGAR
JUSTICE OF THE PEACE,
DEEN FACULTY OF ORDAINED SAIVA PRIESTS,
CHIEF PRIEST,
SRI MUTHUMARIAMMAN KOVIL,
VALVETTITURAI,
JAFFNA.
T. P. No : 0212055114, 0213008738
Cell : 0770167183.

"சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு"
"பிரதிஷ்டாலங்கார சித்தாந்தசாகரம்"
"பிரதிஷ்டா சிரோமணி"
"ஸ்ரீ சுபஸ்வரம்"
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
சமாதான நீதிவான், இந்துமதகுரு பீடாதிபதி, பிரதமகுரு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்,
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
திகதி.....................................



**வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தான**
**பிரதமகுருவின்**
**இரங்கல் செய்தி**
**"வெண்கலக்குரலோசை ஓய்ந்தது"**

ஆதி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், திருமலை சல்லியை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த அப்பாத்துரை சித்திர வேலாயுதத்தின் திடீர் மறைவு எம்மை எல்லாம் ஆற்றொணாத்துயரில் ஆழ்த்திவிட்டது.

அமரர் அவர்கள் கிராமிய சிந்து நடனக் கூத்தினை நெறிப்படுத்துவதில் சிறந்தவராக விளங்கினார்கள். அத்துடன் அண்ணாவியாகவும், சிறந்த நாடக நடிகராகவும் இருந்து அனைவரதும் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவராகவும் காணப்பட்டார். மேலும் சித்திரா பவுர்ணமியான அம்பாளின் தீர்த்தத் திருவிழாவன்று பாடப்படும் "வாசலது வாசலது" என்ற பாடலை இயற்றியவர் திரு சுந்தரமூர்த்தி ஆவார். அவர் முதல்பாட்டை அமரர் சித்திரவேலாயுதம் அவர்களைப்பாடுமாறு கேட்டிருந்தார். இத்தனைக்கும் சுந்தரமூர்த்தி ஒரு பாட்டுக்காரார் ஆவார். ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கொடையை கொடுத்திருப்பதுண்டு. அதன் பிரகாரம் தவில் வாத்தியத்திற்கு ஒரு தெட்சணாமூர்த்திபோல பாட்டுகளை கணீர் என்ற குரலில் பாடும் வல்லமையை இறைவன் சித்திரவேலாயுதத்திற்கு ஒரு கொடையாக கொடுத்துள்ளார்.

இதைத்தான் தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்குறளில் "வகுத்தான் வகுத்தவகை அப்பால் கோடி கொடுத்தார்க்கும் துய்த்தல் அரிது" என்று அழகாகக் கூறியுள்ளார். இது சித்திரவோலாயுதத்திற்கு இறைவன் வகுத்த நியதியாகும்.

இவரின் மறைவுச் செய்தியினை சுவிஸ் நாட்டில் வாழும் எனது சிரேஷ்ட புத்திரன் மாதவன் இணையத்தில் (நெற்றில்) பார்த்துவிட்டு அழுதேவிட்டதாக எனக்கு தொலைபேசியில் தெரிவித்தது மட்டுமன்றி அமரருடைய தொலைபேசி இலக்கத்தையும் அவரின் குடும்பத்தவர்களிடம் வாங்கித் தரும்படி என்னிடம் கேட்டார்கள்.

இப்படியாக அனைவரது நெஞ்சங்களிலும் நீங்காத இடம்பெற்ற ஒருமாமனிதராகத், தான் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்துள்ளார்கள். இவரின் மறைவு அனைவருக்கும் பேரிழப்பாகும். வெண்கலக் குரலோசை ஓய்ந்தது வல்வைநகரின் விடிவெள்ளி மறைந்தது.

எனவே இவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எனதும், எனது சிரேஷ்ட புத்திரன்மாதவனதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிதேசிகர்**

**இந்து மதகுரு பீடாதிபதி**

**பிரதமகுரு**

**வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**

**வல்வெட்டித்துறை.**

2015.11.27

## தீயையன்றோ சுமக்கின்றோம் நாம்

தங்கக் குரலெடுத்து தமிழிசையை உயர்த்தி வைத்தோன்
சிங்கமெனக் கூத்துக்கலை சிறக்கவைத்தோன் - சங்கத்
தென்றலெனத் தேவிபாடல் பாடிவந்த செல்வரையாம்
என்றுதாம் காண்போம் இனி.

வல்வை நகர்பிறந்து வளமார்ந்த கலைபயின்று
சல்லியம் பதியமர்ந்த சித்திரமே நல்வினையால்
நஞ்செவிகள் கேட்டஇசை நமதடுத்த தலைமுறைக்கு
எஞ்சுமென்று யார்சொல்வார் இனி.

சரஸ்வதியாள் உன்நாவில் தாளமிட்டு நர்த்தனத்தை
உரசிவிடும் போதிலெல்லாம் உவகையுற்றோம் - அரசனில்லாப்
பேதைகள் ஆயினோமே, பெருந்தகையே உன்பிரிவால்
தீயையன்றோ சுமக்கின்றோம் நாம்.

உடுக்குக் கையேந்தி உன்விரல்கள் அசைந்தாட
மிடுக்கான குரல்வளத்தின் சிறப்பாலே - எடுப்பாகத்
தமிழன்னை தலைநிமிர்ந்தாள் தமிழிசையும் சிறப்புற்றாள்
எமக்காரோ இனிஇசைப்பார் காண்.

கிராமிய இசைத்திலகம் கீர்த்திமிகு அண்ணாவி
திராவிட மேத்துங்கலா பூசணம் - இராப்பகல்
சல்லிமுத்து மாரித்தாயின் ஓதுவார் உனைப்போற்ற
இல்லைஐயா வார்த்தை இனி.

அப்பாத்துரை சித்திரவேலாயுதனார் புகழ்வாழி
இப்பாரில் அவர்நாமம் தினம்வாழி - தப்பாமல்
தமிழேந்தும் கலைஞர்திறன் தரணியிலே வாழிவாழி
எமையாளுந் தமிழன்னை சிறந்து.

**கந்தவனம் கோணேஸ்வரன்.**
**திருக்கோணமலை.**

உ
ஓம் சக்தி நமக

# சல்லிக்கிராமத்தைச் சேர்ந்த அப்பாத்துரை சித்திரவேல் அவர்களின் ஆத்மசாந்திச் செய்தி

**விநாயகர் துதி**

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடம்
கடிகண பதிவர அருளினர் மிகுகொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே...

ஈழத்தின் சிறப்புமிக்க சிவபூமியாம் திருகோணமலையில் தட்சணாகைலாயம் என போற்றப்படுவதும் திருஞானசம்பந்தர் சுவாமியால் தேவாரம் பாடப்பட்டதும் ஆடவர்களின் ஆடல் கோலம் நிறைந்த திருக்கோணேச்சரத்தின் பெருமை கொண்டு விளங்கும் திருகோணமலை சல்லி எனும் கிராமத்தில் தெய்விக சிந்தனைப் பாடல்கள் உருவாக்க வழிகாட்டியாக இருந்து பல பெயர்களில் சிறப்பு மிக்க பாராட்டுப் புகழ்களை சல்லி மண்ணுக்குப் பெற்றுக் கொடுத்தவர் அமரர் அப்பாத்துரை சித்திர வேலாயுதம் அவர்கள் பிறந்த மண்ணையும் பெற்ற பிள்ளைகளையும் பிறர் போற்ற வாழ வைத்த தெய்வமே! உற்றவரும், மற்றவரும், பெரியவரும் ஏற்றம் காண ஏணி போல் தெய்வீகப் பாடல்களை இறுதியாக பாடி முடித்தவர் நீங்கள்.

"தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தா றோம்பல் தலை" எனும் திருக்குறள் வழி நடந்தவர் நீங்கள்.

ஐம்பூதங்களான உடலில் ஓர் சக்தி இருக்கின்றது. இச்சக்தியே நாங்கள் ஜீவன் அல்லது ஆத்மா என்கிறோம். இந்த ஜீவன் எடுத்த உடலைவிட்டு கிளம்புவதையே மரணம் என்கின்றோம். உயிர் நீங்கிய உடலை நாம் எரிக்கின்றோம்

அல்லது புதைக்கின்றோம். அவ் உடலுக்குள் வசித்த ஜீவனின் கதி என்ன? தான் எடுத்த உடல் அழிந்தாலும் ஜீவன் அழியாமல் இருக்கின்றது என்று உபநிடதங்கள் தெரிவிக்கின்றன. உடலை விட்டு நீங்கிய ஜீவன் ஆவி எங்கே செல்கின்றது! அதற்கு உணவு, உடை, உறைவிடம் யார் கொடுப்பார்கள், எப்படிக் கொடுப்பார்கள், இவற்றை ஜீவன் எப்படிப் பெறுகின்றது, அவற்றை எல்லாம் நாம் அறிந்திருப்பது அவசியமாகும்.

அமரர் அப்பாத்துரை சித்திர வேலாயுதம்
அவர்களின் ஆத்மா சாந்தியடைச் சல்லி
ஸ்ரீ கடற்கரைப் பிள்ளையாரையும் சல்லி ஸ்ரீ
முத்துமாரியம்மனையும் பிரார்த்திக்கின்றோம்.

**சிவாச்சாரியார்**
**சிறப்பு சொற்பொழிவாளர்,**
**கிருபாகரன் குருக்கள்,**
**சல்லி முத்துமாரியம்மன் பேராலயம்,**
**சல்லி, திருகோணமலை.**
02.12.2015.



சர்வமத செயற்பாட்டு ஒன்றியம் தலைவர் (RAA)



கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றியம் செயலாளர் திருமலை
தேசிய சமாதானப் பேரவை இணைத்தலைவர் திருமலை
ஆதி சைவ சிவப்பிராமண ஒன்றியம் (பாசுபத மரபு) செயலாளர்



"சிவாகம சிரோமணி" "வித்யாஞானகலாஜோதி"
சிவ பிரம்மஸ்ரீ . இராஜ கந்தசாமி பத்மநாதக் குருக்கள்(J.P)
ஆதி கோணேஸ்வரம் பிரதம குரு

71.மின்சாரநிலைய வீதி,திருகோணமலை பதிவிலக்கம் : HA/TM/0020

## அறிவொளித்தீபம் அணைந்தது

திரு அப்பாத்துரை சித்திரவேல் அவர்கள் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்டு சமூகத்தொண்டுகள் செய்த பெருமகனாவார். அன்னார் மரணித்த செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையுமடைந்தோம்.

"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்"

எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய முற்றிப்பழுத்த நெற்கதிர்போல் பண்புச் செல்வம் நிறைந்த சீலராய் பணிவின் சின்னமாக தலைசாய்த்து செவ்விய வாழ்வு வாழ்ந்தால்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்"

என்பதற்கொப்ப தொண்டுள்ளமும் சேவைநோக்கமுமே தனது கடமையாகக் கொண்டார். ஜீவ சேவையே சிவசேவை என்ற கோட்பாட்டைப் பின்பற்றினார்.

அவர் வாழ்ந்த பதி "சுவேலகிரி" என இராமாயணத்தில் போற்றப்படும் அருள்மலை அமைந்துள்ள "சல்லிகரிணி" எனும் சஞ்சீவியின் பெயர்பெற்ற சல்லியம்பதியை அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுவர். ஸ்ரீ இராமபிரானால் நவராத்திரி விரதம் அனுஸ்டிக்கப்பட்டு இராவணனை வீழ்த்த

அம்பிகை அருள் புரிந்ததலம் அருகில் ஆஞ்சனேயராகிய அனுமனால் இறுதியாகத் தீக்கிரையாக்கப்பட்ட சாம்பல் தீவு முன்னாள் தட்சண கைலாசம் ஆகும்.

இத்தகு புண்ணியப்பதியில் கைலைவாசனை நோக்கிய வண்ணம் அருளாட்சி செய்யும் சல்லி அம்பாளின் அந்தணத் தொண்டராக எம் முன்னோர் விளங்கினார். அவ்வேளையில் ஆதி சைவ சிவப்பிராமணர் மரபில் குளக்கோட்டு மன்னனால் அழைத்துவரப்பட்ட பாசுபத அந்தணக்குருமாராக இருந்து பூசை, விழாக்களைச் செய்து வந்தனர். அவ்வழிவந்த எமது தந்தையார் இராஜ கந்தசாமிக் குருக்கள் அவர்களோடு இருபது வருடங்களிற்கு மேலாக சல்லி அம்பாள் ஆலயத்தில் உடனிருந்தவர் என்ற ரீதியில் திரு சித்திரவேல் அவர்களை சிறுபராயம் முதலே அறிவேன். திராவிட வேதம் அருளிப்பாடுக என்று தந்தையார் பூசையின் போது கூறியதும் யாரும் எதிர்பார்த்திராத வண்ணம் உறுதியும் கம்பீரமும் மிக்க வெண்கலக்குரலோசை முழங்கியது. அனைவரும் திகைத்தனர், மெய்மறந்தனர். அன்னையும் மயங்கியது போல் மின்சார விளக்கும் அணைந்து மீண்டும் ஒளிர்ந்தது. குரலுக்குரியோன் யாரெனப் பார்த்தபோது ஆணழகனாக தீட்சண்யம் மிக்க கண்களோடு பக்திப் பரவசமாகிநின்ற சித்திரவேல் அவர்களைக்கண்டு அனைவரும் இறும்பூ தெய்தினார்கள். அன்றுமுதல் அவ்வாலயத்தில் நடைபெறும் பூசை விழாக்கள் அனைத்திலும் பாடப்படும் பஞ்சபுராணம், திருவூஞ்சல், திருப்பொற் சுண்ணம், திருவெம்பாவை, காவியங்கள் அனைத்திலும் ஓதுவார் மூர்த்திகள் போல் இருந்து தந்தையாருக்கு ஒத்தாசையாகச் செயற்பட்டார். அம்பாளின் தீமிதிப்பு வைபவத்தையும் உபயகர்த்தராக இருந்து முதலில் நிறைவேற்றி வைத்தார். முத்தமிழ்த்திறமை காரணமாக "ஆரியமாலா திருமணம்" என்ற காத்தவராயன் இசை நடனக்கூத்தை அரங்கேற்றினார். நாடகம் பெருவெற்றி பெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்து மகிழ்ந்தனர் பல இடங்களிலும் மேடையோற்றப்பட்டு கௌரவிக்கப்பட்டார். மக்கள் அவரைச் செல்லமாக "அண்ணாவியார்" என்றே அழைத்தார்கள். அவரது புகழ் ஊடகங்களிலும் வானொலியிலும் எதிரொலித்தது. இவரது

திறமையைக் கண்ட இந்து கலாசார திணைக்களம் “கலாபூஷணம்” விருது வழங்கிக் கௌரவித்தது. விருது பெற்றுவந்த அவரை தமிழர்தம் கலைகளையும் பண்பாட்டையும் பாதுகாக்க துடிப்புடன் செயற்படும் திருமலைச்சந்திரன் அவர்கள் பெரியோர்களையும், பாராளுமன்ற, நகரசபை உறுப்பினர்களையும் அழைத்து வந்து பொது மக்களின் உதவியோடு பாராட்டு வைபவம் நிகழ்த்திக் கௌரவித்தார். “என்கடன் பணி செய்து கிடப்பதே” என்ற அப்பர் பெருமானின் கொள்கையைப் பின்பற்றி தான் வாழ்ந்த கிராமத்து மக்களின் வாழ்வியலிலும் இன்பதுன்பங்களிலும் முதல்மனிதனாக நின்று கடமை புரிந்து மக்களின் அன்புக்குப் பாத்திரமானார். ஆன்மீக சேவையுடன் மக்களின் உயர்வுக்காக தன்னை அர்ப்பணித்த கலாபூஷணம் சித்திரவேல் அவர்களின் மறைவு திருமலை மக்களுக்குப் பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி புத்திரர், உற்றார் உறவினர் ஆகியோருக்கு எமது குடும்பத்தினதும், ஒன்றியக்குருமார்கள் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா எல்லோரும் ஏற்றப்பணிந்து அருள்மலை மேல்நிற்கும் திருவருளாட்சி கொண்ட அன்னை முத்துமாரி அருள் பெற்று இறை ஐக்கியமாகப் பிரார்த்திப்போமாக.

முத்தமிழும் உணர்ந்ததேன் முந்தையோர் மகிழவே
சித்தத்தெளிவோடு செய்வதெல்லாம் - சீராக
வைத்துப்பணி புரிந்த மேதை சித்திரவேல்
அத்தன் அருளாலே அமரருவகையடைந்தான்.

**இவ்வண்ணம்**
**சிவாகம கலாநிதி,**
**இராஜகந்தசாமி பத்மநாதசிவாச்சாரியார்**
**கிழக்கிலங்கை ஆதி சைவ சிவப்பிராமண ஒன்றியம் செயலாளர்**
**சமாதான நீதிபதி, ஆதிகோணேஸ்வரம் – திருகோணமலை.**

## சீர்திரு சல்லியம் பதியில் சித்திரவேலன்

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சல்லி என்னும் பெயர் கொண்ட இக்கிராமத்திற்கு இதிகாசங்களில் ஒன்றான இராமாயண காலத்துடன் தொடர்பு கொண்ட ஆதிசூழ் வெள்ளைமலை உறை முத்துமாரியம்மன் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருவதால் சீர்தரு சல்லியம்பதி என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. முப்பத்தைந்து வருடங்களிற்கு முன்னர் இப்பகுதியில் உறை இளமைக் கால நண்பர்கள் சிலரும் நானும் திருகோணமலை நகரிலிருந்து அங்கு சென்றிருந்தோம்.

மூன்று திசைகளிலும் கடலன்னையின் அரவணைப்பில் வெண்மணற் பரப்பில் அமைந்திருந்த கோவில் வீதிகள் எங்கனும் பக்தர் கூட்டம் கரைபுரண்டோடியது.

பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நிறைந்திருந்த சன சமுத்திரத்தில் தாயைத் தவறவிட்ட குழந்தையின் ஓலம் தந்தையைத் தவற விட்ட மகளின் புலம்பல் என ஒலி பெருக்கி மூலமான அறிவிப்புக்கள் வெளிவந்த தொனியும் சிறந்த உச்சரிப்புடனான கணீர் என்ற குரலும் பலரையும் கவர்ந்து ஒலிபெருக்கி நிலையத்திற்கு இழுத்துச் சென்றது. அவர்களில் நானும் ஒருவன்.

அங்கு நான் கண்டகாட்சி என் மனதைப் பெரிதும் ஈர்ந்தது. சுருண்ட கேசமும் நெற்றியில் திரிபுரண்டரமாகத் தரித்த விபூதிக்குறியும் சந்தனப் பொட்டும் மார்பிலும் கைகளிலும் சந்தனத்தின் கோடுகளுமாக பொன்னிற மேனிக்குச் சொந்தமான அண்ணாவியார் அப்பாத்துரை சித்திரவேலாயுதத்தின் சிம்மக் குரலினூடே, ஒலி வாங்கி அனாயாசமாகக் கைளிலே சுழன்று கொண்டிருக்க விஷேட அறிவிப்புக்கள் ஒலிபெருக்கி மூலமாக வான வீதியில் தவழ்ந்து வந்தன.

இதுவே பின்னாளில் எனது பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நாடக ஆசானும் உறவுக்காரருமாகிய அப்பாத்துரை சித்திரவேலாயுதம் என்கின்ற சல்லியின் சித்திரவேலை நான் முதன் முதல் கண்ட சந்தர்ப்பமாகும்.

இதன் பின்னர் 1982இன் இறுதியில் இப்பகுதியிலுள்ள சங்க நடவடிக்கைகளின் போதும் கோவில் விழாக் காலங்களிலும் எம்மிடையேயான பரஸ்பர உறவு நெருக்கமடைந்தது.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் 1988இல் இவரது உயிர் மூச்சான நடிப்பு ஆற்றலால் சிறந்த அண்ணாவியராகிவிட்ட இவரது நெறியாள்கையின் கீழ் சல்லியம்பதி முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் அம்பாளின் சரித்திரத்தையம் சிறப்பையும் கூறும் “காத்தவராயன்” என்னும் தென்மோடி கூத்தினை மேடையேற்றத் தீர்மானித்து எனது மைத்துனர் உறவான திரு. உவந்ராசா வீட்டு முன்னாலுள்ள மணற் பரப்பிலேயே நடிப்புப்பழக்கம் ஒத்திகை என்பன நடைபெற்றன.

நடிகர்களுக்குரிய வசனங்களை அண்ணாவியாரின் மூலம் கதைப்புத்தகத்திலிருந்து உரியவற்றை எழுதி நடிகர்களுக்கு வழங்கும் பொறுப்புக்கள் மூலம் புத்தகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் என்னிடமே வழங்கியிருந்தார். இவ்வாறாக என்மீது நாட்டம் கொண்ட நெருக்கமான பற்றுதலின் பேரில் ஒரு நாள் நாடகக் குழுவினர் எல்லோரும் ஒருங்கே கலந்து கொண்டிருந்த வேளையில் என்னை அழைத்து பேரா! நீங்களும் ஒரு பாத்திரமேற்று நடிக்க வேண்டுமென்று வற்புறுத்திய அன்புக் கட்டளையின் பேரில் அரைமனத்துடன் நான் சம்மதத்தினை தெரிவித்த போது என்னை வெகுவாக உற்சாகப்படுத்தி என்னுள் உறங்கிக் கிடந்த ஆற்றலை வெளிக்கொணர்ந்து என்னையும் ஒரு நடிகனாக்கிய பெருமை அன்னாரைச் சாரும்.

எங்கள் குலதெய்வமான சல்லியம்பதி முத்துமாரியம்மனின் விழாக்காலங்களிளெல்லாம் அன்னாரின் மதுரக்குரலெனும் இரசத்தை உருக்கி பக்தி ரசம் ததும்ப பாடிய பஞ்சபுராணப் பாடல்கள், காவடிச் சிந்துக்கள், மலைப்பாட்டு, வாசல்பாட்டு, தெய்வ அழைப்புப் பாட்டு என எண்ணற்ற பாடல்களை எல்லாம் கோட்கும்தோறும் உள்ளம் உருகி உயர்ச்சி ததும்பி எம்மை அறியாமலே கண்களில் நீர் நிரம்பிய நாட்கள் ஒன்றல்ல, இரண்டல்ல...

வெள்ளை மலை உறை முத்து மாரியம்மனின் மீது அன்னார் கொண்ட அசைக்க முடியாத தீவிர பக்திக்கு சான்று கூறுவதாக அவரது கைகளில் எப்போதும் தவழும் “வெள்ளை மலை” என்ற வாசகம் பொறிக்கப்பட்ட வெண்கலத்திலான தாளங்களே போதுமானவை.

அம்பாளை அவரவர்க்கு உகந்த பக்தி சிரத்தையோடு வந்து தரிசித்து அம்பாளின் அருள் மழையில் நனையத் தவறிய

உள்ளங்கள் கூட அன்னாரின் பக்தி மணங்கமழும் இசை மழையில் நனையத் தவறியதில்லை என்றே கூறலாம்.

அன்னாரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த இசையென்னும் அமிர்தத்திற்கு தனக்கே உரிய பாணியில் பல விதமான மெட்டுக்களில் இசைத்துப் பாடப் பெற்ற காவடிச் சிந்துப் பாடல்களினால் வெகுவாக ஈர்க்கப்பட்டு அன்னாரது மானசீக சீடர்களாகி கையிலே சிற்றுடுக்கையும் வாயிலே காவடிச் சிந்துமாக சல்லியம்பதிக்கு பெருமை சேர்க்கும் இன்றைய சீடர்களை உருவாக்கிய பெருமையும் அன்னாரையே சாரும்.

அன்னார் சல்லியம்பதி முத்துமாரியம்பாள் ஆலயத்தின் ஓதுவாராக இருந்து ஆற்றிய பங்களிப்பினை இந்த மண் இருக்கும் வரை இங்கு வாழும் அன்பு உள்ளங்கள் மறக்காது என்றே கூறுவேன்.

இவரது தெய்வீகக் குரலினால் இசைக்கப்பட்ட பாடல்கள் ஒலி நாடாவாகவும் இசைத்தட்டுக்களாகவும் இறுவெட்டுக்களாகவும் இலங்கைத் திருமணி நாட்டில் மட்டுமன்றி கடல் கடந்த நாடுகளிளெல்லாம் ஒலிக்கின்ற அன்னாரின் நாமத்தினைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளையில்

**“கலைஞன் என்பவன் காலத்தால் அழியாதவன்”**

என்ற வாக்கிற்கமைய சீர் மூலையில் அன்புள்ளங்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டே இருப்பான். என்று கூறி அன்னாரது ஆத்மா ஈடேற்றம் பெறவும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்கவும் என்று வேண்டி நிற்கும்.

**அன்னாரின் பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்**
**இ.சிதம்பரநாதன்**
**(இளைப்பாறிய அஞ்சல் அதிபர்)**

## வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
## தீர்த்தம் ஆடிவரும் வாசல்பாட்டு

1. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது
2. மேடையிது மேடையிது எங்கள் மெல்லி இடையாளுடைய மேடையிது.
3. நாங்கள் பூசைபண்ணி அநுதினமும் புகழ்ந்தேற்றும் மாரி வாசலிது
4. ஆயிரம் மாரி கண்ணுடையாள் எங்கள் அலங்காரி வரும் வாசலிது
5. பதினாயிரம் மாரி கண்ணுடையாள் எங்கள் பராசக்தி வரும் வாசலிது
6. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது
7. கங்கையிலே மாரி தலைமுழுகி எங்கள் கிளிமொழியாள் வரும்வாசலிது
8. வைகையிலே மாரி தலைமுழுகி எங்கள் வனமயிலாள் வரும்வாசலிது
9. பொய்கையிலே மாரி தலைமுழுகி எங்கள் பூங்கொடியாள் வரும் வாசலிது
10. சித்திரையா பறுவத்திலே அம்மன் தீர்த்தமாடி வரும் வாசலிது
11. வீதிசுத்தி பவனிவரும் எங்கள் மேகவண்ணன் தங்கை வாசலிது
12. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது
13. உலகளந்தோன் தங்கையராம் அம்மன் உத்தமியாள் வரும் வாசலிது
14. கோடியா கரையை விட்டு இங்கே குதித்து வந்தாள் வரும் வாசலிது
15. அரனுடனே வாதாடும் எங்கள் ஆங்கார மாரி வாசலிது
16. சிவனுடனே வாதாடும் எங்கள் தேவி நல்லாளுடைய வாசலிது
17. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது.

**தொகுத்தவர் : வல்வை திரு. அப்பாத்துரை சித்திரவேலாயுதம்**

சித்திரத்தேர் சிறப்பு மலர் - 09.05.1979
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை எனும் மலரிலிருந்து

## ஈழத்தாய் ஈன்றெடுத்த இசைத் தியாகி

ஈழத்திருநாட்டின் பாடல் பெற்ற தலம் கோணேஸ்வரம் தாயினும் நல்ல தலைவெரென்று கோணேச பெருமானை போற்றுவர். இத்தகைய புகழ் பூத்த சல்லியம்பதி புண்ணிய பூமியில் பலகாலம் வாழ்ந்து சல்லியம்மனுக்கு ஓதுவார் ஒலி எழுப்பி இசைத்தாய்க்கே தன்னை அர்ப்பணித்த ஈழத்தாய் ஈன்றெடுத்த தமிழ் இசைத்தியாகி கலாபூஷணம் கிராமிய இசைத்திலகம் அமரர் அ.சித்திரவேலாயுதம் ஐயாவைப் பற்றி ஒரு சில நினைவலைகள்...

நான் தரிசனம் நிறுவனத்தை ஆரம்பித்ததன் நோக்கம் தமிழரின் ஆன்மீகம் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை பாதுகாத்து இனிவரும் தலைமுறையினருக்கு அர்ப்பணிப்பதே யாகும். அந்த வகையில் எமது தாய்க்கலைஞர்களின் படைப்புகளை மீள் பிரவேசம் செய்வதில் நானும் எனது தொண்டர்களும் ஆய்வுகளை மேற்கொண்டிருந்த வேளையில்.

“என்னை இறைவன் நன்றாய் படைத்தான்
தன்னை நன்றாய் இசை தமிழ் செய்யுமாறே” என்ற திருமூலரின் வாக்குகேற்ப்ப சித்திரவேலாயுதம் ஐயாவை பார்த்தேன். அவர் சல்லியம்மனுக்கு திருவூஞ்சல் பாடிக் கொண்டிருந்த வேளையில் அவருடைய குரல்வளத்தால் என்னையே நான் மறந்து விட்டதுபோல் உணர்ந்தேன். கம்பீரம் மிகுந்த குரலுக்கு சொந்தக்கரரான அவரிடம் முதுமையிலும் இளமையை நான் கண்டேன். அந்த வேளையில் எனக்குள் ஓர் பிரவாகம் தோன்றி மின்னலாய் மறைந்தது. சைவத்துக்கும் தமிழுக்கும் இக் காலத்து குருவாக போற்றப்படும் அளவிற்கு தகுதியும் தரமும் வாய்ந்தவராக நான் அவரை இனம் கண்டேன். இவரது பொய் உடல் மறைந்தாலும் இவரின் புகழும் இனிய குரலும் மறைந்து விடக் கூடாது என்பதற்காக தேனிலும் இனிய தெவிட்டாத குரலை அவர் வாழும் காலத்தில் அவர் குரலில் பாடி ஒலிப்பேழையாய் உருவாக்கி அவருக்கோர் விழா நடாத்த வேண்டும் என அவரிடம் அனுமதி கோரினேன். அவரும் பெருமிதத்தோடும் மனநிறைவோடும் எனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். ஒலிப்பதிவு வேலைகளை துரிதமாக மேற்கொண்டு அவரையும் அழைத்து கொண்டு ஒலிப்பதிவுக் கலையகத்திற்க்கு சென்றேன். அப்போது ஒலிப்பதிவு கூடத்தில் இருந்த கலைஞர்கள்

அவரின் வயதையும் முதுமையையும் அவர்கள் பார்த்த கண்ணோட்டத்தில் என்னிடம் கேட்டார்கள். இந்த முதியவரா பாடப் போகின்றார்? என்று, ஏன் என்றால் கேட்டவர்கள் எல்லாம் இளவயதினர் அவர்களிடம் நான் கூறினேன் அவரும் பொடியன்தான் ஒலிப்பதிவு முடிந்தவுடன் தெரியும் என்று. அதேபோல் அந்த சம்பவம் நடந்தது. அன்று காலை ஒலிப்பதிவுக்கு தயாராக இருந்த வேளையில் நான் ஐயாவிடம் கூறினேன் "ஒலிப்பதிவுக்கு உள்ளே சென்று விட்டால் வெளியே வர முடியாது சாப்பிட்டு விட்டு செல்வோம்" என்று. என்னைப் பார்த்து சிரித்தார் இறைவனின் புகழ் பாடும் போது உணவு எதற்கு? முடிந்தவுடன் பார்ப்போம் என்றார். காலை 9 மணிமுதல் 3 மணிவரை எந்த வித ஒத்திகையும் இல்லாமல் தொடர்ந்து பாடினார். அந்தநேரத்தில் அவர் முகத்தில் சோர்வோ களைப்போ இல்லாமல் புன்னகையுடன் பாடி முடித்தார். அனைத்து கலைஞர்களும் வியந்து எழுந்து நின்றனர். நாங்கள் கூறியது பிழையென மன்னிப்பு கேட்டனர். அவரிடம் ஆசீர்வாதமும் பெற்றுக் கொண்டனர். எனக்கு அது மறக்க முடியாத சம்பவமாக மாறிவிட்டது. இன்று அவர் மறைந்தாலும் எங்களுள் வாழ்கின்றார். அவரின் ஆத்மா சாந்தியடைய தரிசனமும் நானும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவர் மறைந்தாலும் அவரின் இனிய குரல் இலங்கையில் மட்டுமல்ல புலபெயர்ந்த நாடுகளிலும் வாழ்ந்து கொண்டும் ஒலித்துக் கொண்டும் உள்ளது.

"ஒரு கலைஞன் மறைந்தாலும் மழையாய் பொழிவான்
ஒரு கலைஞன் மறைந்தாலும் விதையாய் விளைவான்"

**சு.கமலச்சந்திரன்**
**திருமலை S.K.சந்திரன்**
**தலைவர்**
**தரிசனம் பப்ளிகேசன்**
**திருக்கோணமலை**
**T.P : 0777 171377, 075 2171946**
**E-mail : ttharisanam@gmail.com**
தரிசனம் தமிழரின் ஆன்மீகம் கலை பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் களஞ்சியம்

## புற்று நோய்பற்றிய ஓர் கண்ணோட்டம்

* **புற்றுநோய் அவதானமாக செயற்பட வேண்டிய நோயாகும்.**
* **புற்றுநோய் பற்றி சமூகத்தில் நிலவும் உண்மைகளும் எண்ணங்களும்**

**புற்று நோய் என்றால் என்ன?**

எமது முழு உடலுமே "கலங்களால்" கட்டமைக் கப்பட்டவையாகும். கலங்கள் என்பவை கட்டிடத்தின் "செங்கற்களுக்கு" ஒப்பானவை தினமும் உடலில் கோடிக்கணக்கான கலங்கள் இறக்கின்றன. இவற்றை ஈடு செய்ய கலங்கள் இடையறாது இரண்டிரண்டாகப் பிரிந்து புதிய கலங்கள் தோன்றுகின்றன. எனினும் சில நேரங்களில் எமது உடலில் தேவையற்ற கலங்கள் தோன்றி கட்டுப்பாடற்று பல்கிப் பெருகி அவசிய உடலுறுப்புக்களின் செயற்பாட்டை முடக்கி மரணத்தை ஏற்படுத்துகின்றன. இதுவே புற்று நோயாகும்.

**புற்று நோய் கிருமிகளால் ஏற்படும் நோயா?** இல்லை

**புற்றுநோய் தொற்றுநோயா?**

எச்சந்தர்ப்பத்திலும் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு புற்றுநோய் பரவுவதில்லை.

**புற்றுநோய் பரம்பரையாக வரும்நோயா?**

புற்றுநோய் பரம்பரையாக வருவதாக இதுவரை எவ்வித ஆதாரமும் இல்லை. எனினும் குடும்பத்திலுள்ள சில தவறான பழக்க வழக்கங்களால் சந்ததியினருக்கும் ஏற்படலாம்.

**புற்றுநோய்க்கு ஆளாவோரின் வயதெல்லை என்ன?**

சிறுவயதினர், இளவயதினரிடையே மிக அரிதாக காணப்பட்டாலும் பெருமளவில் 30 வயதிலிருந்து 65 வயது வரை உள்ளோரை இது தாக்குகின்றது.

**புற்றுநோயின் பொதுவான அறிகுறிகள் எவை?**

1. உடலில் அவதானிக்கக் கூடிய வகையில் தோன்றி விரைவாக வளரும் கட்டிகள்.
2. உடலில் சில அவயவங்களில் இடையிடையேயான இரத்தக்கசிவு
3. ஓயாத சமிபாட்டுச் சிக்கல்
4. சீரற்ற மலப்போக்கு
5. காரணமின்றி வேகமாக குறையும் உடல்நிறை
6. கட்டிகளின் நிறமோ அளவோ மாறுதல்

மேற்கூறிய அறிகுறிகள் உள்ளவர்கள் தாமதியாது தகுந்த மருத்துவரை அணுகி போதியளவு தகவல்களை அளிக்கும்போதே நோயை கண்டறிய முடியும்.

* **புற்றுநோயின் தாரக விதி :**

ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை மேற்கொண்டால் மட்டுமே நோயை முற்றாக குணப்படுத்த முடியும். நோய் முற்றும் வரை வைத்திருந்து பின்னர் மருத்துவமனையை நாடும்போது சிகிச்சைகள் பலனளிப்பதில்லை.

* **புற்றுநோய் தோன்றுவதற்கான புறக்காரணிகள் எவை?**

1. காரம் அதிகம் உள்ள உணவு வகைகளை தொடர்ச்சியாக உட்கொள்ளல்.
2. நீண்டகாலம் அதிகளவான மதுப்பாவனை
3. இரைப்பைப் புண்போன்ற ஏனைய நாட்பட்ட நோய்களை வருடக்கணக்கில் கவனியாது விடல்
4. நீண்டகாலம் மிதமிஞ்சிய புகைப்பழக்கம்
5. புகையிலை போன்றவற்றின் உமிழ்நீரை விழுங்குதல்
6. இரசாயனப் பதார்த்தங்கள், கழுவப்படாத மரக்கறி வகைகள் என்பவற்றை உட்கொள்ளுதல்.
7. உணவுப் பதார்த்தங்களை அவசரமாக விழுங்கி உண்ணல்
8. நச்சு இராசயனங்கள் உடலில் அடிக்கடி படுதல்.
9. சிராய்ப்புகள், கண்டல்கள், புண்கள் அடிக்கடி தாங்குப்பட்டு நீண்டகாலம் மாறாமல் இருத்தல்.

* **புற்றுநோய்யை தவிர்க்க கூடிய வழிமுறைகள் என்ன?**

மேற்கூறியவற்றை தவிர்ப்பதுடன் ஏனையவையாக

1. விற்றமின் E உள்ள உணவுகள், தாவர எண்ணெய், மருந்துகள் அற்ற தூய பழங்கள், இரசாயனம் பாவிக்காத உணவுகள், பச்சை இலை மரக்கறிகளை உட்கொள்ளல்.
2. வாய், பற்கள், உடல் என்பவற்றை சுத்தமாக வைத்திருத்தல் அடிக்கடி குளித்தல்
3. போதிய உடற்பயிற்சி மேற்கொள்ளல்.
4. புற்றுநோயாக மாறாக்கூடிய நாட்பட்ட நோய்களை குணப்படுத்தல்

**புற்றுநோயின் முக்கிய வகைகள்**

**1. இரைப்பைப் புற்றுநோய்**

புற்றுநோயாளர்களில் 60% ஆண்களும் 48% பெண்களும் இப்புற்று நோயால் பாதிக்கப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 36 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இரைப்பையில் தோன்றும் புண் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாறாது காணப்படின் இப்புற்று நோய் ஏற்படுகிறது.

**இரைப்பைப் புற்றுநோயின் விசேட அறிகுறிகள் :**

1. விட்டு விட்டு அடிக்கடி ஏற்படும் தீவிரமான வயிற்றுவலி
2. வாந்தி மலத்துடன் இரத்தம் வெளியேறல்
3. பலவீனம், களைப்பு

**இரைப்பை புற்றுநோயை தடுக்கும் வழிவகைகள் :**

1. இரைப்பைப் புண்களை உரிய மருத்துவரை நாடி முற்றாக ஆரம்பநிலையிலேயே மாற்றுதல்
2. பதட்டமான, பிரச்சினையான மனநிலையை தவிர்த்தல்.
3. உணவுத்தொகுதியை பாதிக்கும் உணவு குடிவகைகளை தவிர்த்தல்.

**2. உணவுக்குழாய் புற்றுநோய்**

புற்றுநோயாளர்களில் 9-20 வீதமானவர்களுக்கு இவ்வகைப் புற்றுநோய் தோன்றுகிறது. இளவயதினரில் மிக அரிதாக காணப்படுவதுடன் 50-65 வயதானவர்களிடையே அதிகமாக இது ஏற்படுகிறது. பெரும்பாலும் ஆண்களே இவ்வகைப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இந்நோயாளர்களில் 95 வீதமானவர்களுக்கு உணவுக் குழாய் புற்றுநோய் ஏற்படக் காரணம் தொடர்ச்சியான புகைப்பழக்கமும் காரமான மதுவகைகளை தொர்ச்சியாக உள்கொள்ளலுமாகும்.

**3. மார்பகப் புற்றுநோய்**

இது 36 தொடக்கம் 50 வயதுள்ள பெண்களுக்கு பொதுவாக ஏற்படுகின்றது. இப்புற்று நோய் ஏற்பட 60%மான காரணம் மார்பகங்களில் ஏற்படும் அடிகள், சிராய்ப்புகள் போன்றவையே என கண்டறியப்பட்டுள்ளது.

**முக்கிய அறிகுறிகள்**

மார்பகங்கள் கல்போன்று கட்டியாதல் அழுத்தும் போது அதிக வலி, தோள் பகுதிகளில் மிதமிஞ்சிய வலி, மார்பகங்களில் கட்டிகள், படைபோன்ற தடிப்புகள் தோன்றுதல், முலைக்காம்புகளில் நீரோ சீழோ வெளிப்படல் மேற்கூறிய அறிகுறிகள் காணப்படின் தாமதமின்றி உடனடியாக தகுந்த மருத்துவரை நாட வேண்டும். 40 வயதினை தாண்டிய பெண்கள் 6 மாதத்திற்கு ஒரு தடவையாவது தமது மார்பகங்களை பரிசோதித்து மேற்கூறிய அறிகுறிகள் உள்ளனவா என்பதை கண்டறிவது அவசியமாகும். ஆரம்பத்திலேயே கண்டறிந்து தகுந்த சிகிச்சைகளை மேற்கொள்ளும்போது 90 வீதமானவர்களில் முழுமையான நிரந்தர குணமேற்படுகிறது.

**4. கருப்பைப் புற்றுநோய்**

பெண் புற்று நோயாளர்களில் அதிகம் பேரை பாதிப்பது இப் புற்றுநோயாகும். வயது கூடியோரையே அதிகளவில் இப்புற்றுநோய்

தாக்குகின்றது. பெண் உறுப்புப்பகுதிகளை சுத்தமாக பேணுவது இந்நோய்வராமல் தடுப்பதற்கான சிறந்த வழிமுறையாகும்.

**முக்கிய அறிகுறிகள்**

1. மாதவிடாய் தோன்றுவதில் ஏற்படும் ஒழுங்கீனங்கள்
2. மாதவிடாய் முடிந்து சில தினங்களின் பின்னரும் உதிரம் வெளியேறல்
3. அதிகளவான உதிரப்பெருக்கு
4. மாதவிடாய் வருதல் நின்றுபோய்விட்ட சில மாதங்களின் பின்னரும் உதிரப்போக்கு காணப்படல்.

மேற்கூறிய அறிகுறிகள் காணப்படின் தாமதமின்றி மருத்துவரை அணுகி பரிசோதித்தல் வேண்டும். இந்நோய் முற்றிய நிலையில் அடிவயிற்றுப் பகுதிகளில் தீராத வலி காணப்படும்.

**5. நுரையீரல் புற்றுநோய்**

புற்றுநோய்களில் 12.5% இவ்வகைப் புற்றுநோயாகும். முதலில் இது மூச்சுக் குழாயைப் பாதித்து பின் நுரையீரலுக்குப் பரவுகிறது. இதனை ஆரம்ப நிலையில் கண்டறிவது கடினமான விடமாகும். இந்நோய்க்கான 85 வீத காரணமாக பல ஆண்டுகளாக மித மிஞ்சிய புகைப்பழக்கம் காணப்பட்டாலும், எல்லா புகைப்பிடிப்பவர்களையும் இது பீடிப்பதில்லை.

**முக்கிய அறிகுறிகள்**

அடிக்கடி இருமல் காணப்படும் காலையில் அதிகமாக காணப்படும் இருமல் இரவில் இடைவிடாத இருமலாக மாறும். உடல் எப்போதுமே உட்காய்ச்சல் போன்று சற்று சூடாக காணப்படும். நெஞ்சுப்பகுதியிலும், விலாப்புறங்களிலும் கடும்வலி காணப்படும் நோய் முற்றிய நிலையில் மார்புப்பகுதி மரத்துப்போவது போல் இருப்பதுடன் வலி நிவாரண மருந்துகளுக்கும் கட்டுப்படாத தீராத கடும் வலி காணப்படும்.

குரல் அடைப்பதுடன் சிரமப்பட்டு மூச்சு விட வேண்டியிருக்கும். நோய் முற்றிய நிலையில் எவ்வித சிகிச்சையும் இல்லை. ஆரம்ப

நிலையில் நுரையீரலில் குறிப்பிட்ட பகுதியை அறுவைசிகிச்சை மூலம் அகற்றி நோயை கட்டுப்படுத்தலாம்.

**சாரம்சமான சில புற்றுநோய் பற்றிய முக்கிய விடயங்கள்**

1. அவசியமற்று உடலில் தோன்றும் கட்டிகளை கொடுமையான கட்டிகள், கொடுமையற்ற கட்டிகள் என இரண்டாக பிரிக்கலாம். எவ்வகை கட்டியாயினும் ஆரம்பத்திலேயே அகற்றுதல் அவசியமாகும்.
2. எவ்வகைப் புற்றுநோயாயினும் ஆரம்பத்திலேயே கண்டு பிடித்தால் மட்டுமே முற்றிலுமாக குணப்படுத்த முடியும். முற்றிய பின் சிகிச்சை பயனளிக்காமல் மரணமே ஏற்படும்.
3. 30 வயதிற்குமேல் உடலில் தோன்றும் எந்த அசாதாரண மாற்றங்களையும் அவதானித்து, உடனே நிபுணத்துவம் உள்ள மருத்துவரிடம் காட்டுதல் வேண்டும்.
4. இரசாயன மரக்கறிகளை தவிர்த்து வீட்டிலேயே இயற்கை உரம் மூலம் உற்பத்தியாகும் காய்கறிகளை பாவித்தல் வேண்டும்.
5. நாட்பட்ட நோய்கள் கண்டல்கள் சிராய்ப்புக்கள் புண்கள் போன்றவற்றை முற்றாக மாற்றுதல் வேண்டும்

**சித்திரவேலாயுதம் வீரசுதாகரன்**
முகாமைத்துவ உதவியாளர்
வலயக் கல்வி அலுவலகம்
திருகோணமலை

## அருகிவரும் ஈழத்து பழந்தமிழர் கலைகள் செய்ய வேண்டியது என்ன?

கலைகளும் இலக்கியங்களும் காலவோட்டத்தின் புள்ளிகளைக் காட்டும் கண்ணாடிகள் என்பர். பல்லாயிரம் ஆண்டுகால தொன்மையான பாரம்பரியத்தைக் கொண்ட ஈழத்து தமிழர் வாழ்வியலின் பிரியாத பாகமாக பல அரிய கலைகள் சந்ததி சந்ததியாக இதுவரை காலமும் கடத்தப்பட்டு வந்துள்ளன.

இவ் இயல், இசை, நாடகக்கலைகள் அக்கால மாந்தரின் அரசியல், தொழில், வாழ்வு, சமயம், பண்புசார் நடைமுறைகளின் பிரதி பிம்பங்களாகவே காணப்பட்டன. இக்கலைகள் மிக அண்மியகாலம் வரை மனிதருக்கு உவகையூட்டுபவையாகவும். நீதி, அரசியில் நடைமுறைகளை ஞாபகப்படுத்துபவையாகவும். சமய வழிபாட்டு முறைகளை வெளிப்படுத்துபவையாகவும், தொழிலினை மேற்கொள்ளும் போது ஏற்படும் அயற்சியை போக்குபவையாகவும் காணப்பட்டன.

இவ் ஈழத்து பழந்தமிழர் கலைகளில் **ஆடல் கலைகளாக** கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மியடித்தல், தெய்வமாடல், ஊஞ்சல் போன்றவையும், **பாடல்கலைகளாக** உழவு, நடவு, கதிரறுப்பு, களையெடுப்பு பாடல்கள், கும்மிப்பாடல், கரகப்பாடல், ஊஞ்சல் பாடல், வாசல்பாடல், ஒப்பாரி, தாலாட்டு, கப்பல் பாடல், கரைவலை அம்பா, வலை வைத்தல்பாடல், தோணிப்பாடல் ஆகியவையும் **நாடகக் கலைகளாக** காத்தவராயன் கூத்து, வசந்தன் கூத்து, குறவள்ளிக் கூத்து, அரிச்சந்திரன் நாடகம், ஏனைய வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் போன்ற இன்னோரன்ன பொக்கிஷங்கள் பல்வேறு வகைகளில் காணப்பட்டு அன்றாட வாழ்வின் பயன்பாட்டில் இருந்து வந்தன.

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட இப்பழந்தமிழர் கலைகளின் மீது உலகளாவிய ரீதியில் 1800களில் ஏற்பட்ட

கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து உருவான இயந்திரங்களும், 1970களில் ஏற்பட்ட இலத்திரனியல் புரட்சியை அடுத்து உட்புகுத்த பொழுது போக்கு இலத்திரனியல் சாதனங்களும், ஓரளவு பாதிப்பினை ஏற்படுத்தியது மட்டுமல்லாது மிக அண்மைக் காலத்தில் பூதாகாரமாக மனித வாழ்வை விழுங்கிவரும் எண்மத் தொழிநுட்பம் (Digital Technology) இக்கலைகளை இளைய தலைமுறைகளின் சிந்தனையை விட்டே அகலச் செய்யும் கைங்கரியத்தை மேற்கொண்டு வருகிறது. இந்த அசுரவளர்ச்சியை தறிகெட்ட வேகத்தில் பறக்கும் மோட்டார் வாகனமாகவும் மனித வாழ்வை அதன்முன்னால் நடுவீதியில் செய்வதறியாது திணறும் குட்டிக் குரங்காகவும் ஒப்பிடலாம்.

நூற்றாண்டு காலமாக மெதுவாக மாறிவந்த உலக வாழ்வியல் நடைமுறைகளினூடு தன்னையும் சிறிது மாற்றி ஈடு கொடுத்து வந்த பழந்தமிழர் கலைகள் இன்றைய சடுதியான விசைவேக உலகமாற்றத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் திக்கித் திணறிப்போய் நிற்கின்றது.

நான் சிறுவனாக இருந்தபோது பார்த்து கேட்டு ரசித்த கரைவலை அம்பா எங்கே போயிற்று? உழவு செய்து பயிர் நட்டு அறுவடை செய்து சூடடித்து நெல்லையும் சாக்குகளில் கட்டும் சுனாமி இயந்திரத்திடம் செவியைக் கிழிக்கும் விர் என்ற ஓசையை தவிர உழவுப் பாடலையும் நடவுப்பாடலையும், கதிரறுப்புப் பாடலையுமா எதிர்பார்க்க முடியும்! நாடகங்களையும் கூத்தையும் பற்றி பேசவே வேண்டாம். ஸ்மார்ட்போன்களுடன் அலையும் இளவயதினரையும், இளமையாக உணரும் முதியவர்களையும் நிறுத்தி நிற்பாட்டி கூத்துப்பழக்கி மேடையேற்றி முடிக்க ஒரு கூத்திற்கு பத்து, இருபது அண்ணாவிகள் தேவைப்படும் காலமிது.

வெள்ளத்தை வெள்ளத்தின் போக்கிலேயே சென்றுதான் முறியடிக்க வேண்டும். எம் ஈழத்து பழந்தமிழர்கலைகளை புதிய தொழினுட்பங்களுக்குகேற்ப மாற்றியமைத்து எதிர்காலச்சந்ததிக்கு ஊடுகடத்தும் செயற்பாட்டை குறுகிய வட்ட செயற்பாடுகளாக அல்லாமல் ஒரு பரந்துபட்ட செயற்றிட்டத்தினூடாக முன்னெடுக்க

வேண்டும். மேலை நாடுகள் ஒருவேளை தற்போதுள்ள மனிதகுலம் அழிந்தாலும் எதிர்கால மனிதருக்காக தமது பாரம்பரியங்களை, அன்றாட வாழ்வியலை வெளிப்படுத்தும் காட்சி அமைப்புகளை தயாரித்து பூமியின் ஆழத்தில் கொள்கலன்களில் இட்டு புதைக்கும் செயற்பாட்டை எப்போதிருந்தோ மேற்கொண்டு வருகின்றன. நாம் என்ன செய்கிறோம்? என்பதை ஆர்வமுள்ள ஒவ்வொரு தமிழனும் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவாகும்.

இத்தருணத்தில் தனது அந்திம காலம் வரை தன் சக்திக்கு இயன்ற அளவு எமது ஈழத்து தமிழர் பாரம்பரிய கலைகள் பலவற்றை உயிரோட்டமாக வாழ்வித்து சில எதிர்கால சிந்தனையுள்ள சான்றோரின் துணையுடன் அவற்றுள் ஒரு சிலவற்றை நவீன தொழிநுட்ப வடிவங்களில் பதிவு செய்து அமரராகிவிட்ட எனது தந்தை அண்ணாவியார் அ.சித்திரவேலாயுதம் அவர்களை இச் சமூகத்தின் சார்பில் சிரம்தாழ்த்தி வணங்கும் இவ்வேளையில் இப்படியாக இன்றும் உயிரோடுள்ள கலைஞர்களை கண்டறிந்து அவர்களிடமுள்ள விலைமதிக்க முடியா கலைப் பொக்கிஷங்களை வெளிக்கொணரும் பரந்துபட்ட செயற்திட்டங்களை வலுவுள்ள அரச நிறுவனங்களும், தனி நிறுவனங்களும், ஆன்றோரும் சான்றோரும் மேற்கொள்ள எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

**சி.வீரசுதாகரன்**
**முகாமைத்துவ உதவியாளர்**
**வலயக்கல்வி அலுவலகம்**
**திருகோணமலை**

## இப்போது உணர்கிறேன்


ஆழிப்பேரலைகளாய் ஓயாது நெஞ்சில் எழும்
ஐயாவின் ஞாபகப் பதிவுகளோடே
தேடிப்பார்க்கின்றேன் அவரது சொரூபத்தை...
ஐயா என்றால் பாசம் அது எப்போதும் எமைச்சுற்றி தென்றலாய் வீசும்...
மடியில் கொடுகிய குஞ்சாய் உறங்கிய சிறுபராயம் கன்னத்தில்
இப்போதும் தெரிகிறது ஐயாவின் மடிச்சூடு...
வீட்டினுள் கால் நுழையுமுன்பே கண்கள்
எனைத்தேடி முன்நுழைந்து விடும்...
இப்போது புரிகிறது
அது கண்டிப்பு எனும் போர்வை மூடிய
பரிவு எனும் பாற்கடலென்று வளர்ந்த பின்...
எமக்குள் அவ்வப்போது தோன்றும் கருத்து முரண்பாடுகள்
இப்போது விளங்கிறது...
அவற்றுள் பொதிந்திருந்தது என்மீதான அக்கறையென்று...
படுக்கையில் ஐயா வீழ்ந்த நாட்களிலும்
உணவு வேட்கையோ, நோய்கொடுத்த வலிகளின் சேர்க்கையோ
அவரை உழந்த வைக்கவில்லை வாய்பேச முடியாமல்
தன்னுள் கொப்பளிக்கும் அரிய பழந்தமிழ் கலைகளை
தீ விழுங்கப் போகிறதே என்ற ஆற்றாமையே அவரை
புரளவைத்தது...
அவர் தேவராகவோ தெய்வமாகவோ
வாழ்ந்தார் என்று பொய்யுரைக்கவில்லை
நிறைகளை பலவாகவும் குறைகளை குறைவாகவும் கொண்ட
சீரிய மனிதராகவே வாழ்ந்தார் என்பதை
என் நெஞ்சில் அவரை நினைக்கயில் தோன்றும்
அமைதியும் ஒளியும் பறைசாற்றுகின்றது
இறுதியாயும் அறுதியாயும் என் அகக்கண்ணில் தெரிகிறது.

கணப்பொழுதும் அவர் மறவாத
வெள்ளைமலை எனும் பேரொளியில்
ஒரு சீரொளியாய் அவர் ஐக்கியப்பட்ட காட்சி...

காலச் சூழலில் சிக்கி இந்த பூமி அழியும் வரை
காற்று வெளியில் ஓயாது ஒலிக்கும் அவர் நாமம்.

# நான் கண்ட சித்திரை அண்ணா

எனது பக்கத்து வீட்டில் புலி ஆச்சியும் புலி அப்பாவும் வாழ்ந்து வந்தனர். எனக்கு அறிவு தெரிந்த பின்னர்தான் அவர்கள் எனது பெரியம்மா குடும்பமென நான் அறிந்தேன். என்னை ஒருவர் அடிக்கடி கூப்பிட்டு உனக்கு என்னபெயர் என்று கேட்பார். நான் **எணக்கு** ஜெயம் என்று சொல்வேனாம். இதை அவரும் அவரது நண்பர்களும் சிறப்பாக தங்கக் குட்டி அண்ணாவும் சேர்ந்து ரசித்து அடிக்கடி என்னை இவ்வாறு சொல்லவைத்து என் செல்லக்கதையை கேட்டு மகிழ்வார்களாம். இதை பின் நாட்களில் எனக்கு சொன்னது நான் கண்ட இத்துடன் உள்ள மற்றோரை கவர்ந்திழுக்கும் வசீகர தோற்றம் கொண்ட அப்பாத்துரை எனும் புலிஅப்பாவின் மகன் சித்திரை அண்ணாவே.



இவர் எனது உறவினர் என்பதாலும் நான் நேசிக்கும் மண்ணான ஆதிகோவிலடியில் பிறந்தவ ரென்பதாலும் அவர் மீது எனக்கு பாசமும் மதிப்பும் பெருகியிருந்ததில் வியப்பிற்கிடமில்லை. என் செல்லக் கதை கேட்டு மகிழ்ந்த அண்ணா எனது பள்ளிப் பருவத்தில், தான் 05 சதம் தந்து என் செல்லக்கதை கேட்கின்ற விடயத்தையும் சொல்லி ஆதிகோவிலடியில் நீ படித்து ஒரு பெரிய ஆளாக வரவேண்டும் உன் கதையின் பாணியிலிருந்து உன்னிடம் நிறைய கெட்டித்தனம் இருக்கு என கூறி என் கல்விக்கு அடிக்கடி ஊக்குவிப்பு தந்தார்.

நான் அவரது ஆசைப்படியும் ஆசீர்வாதப்படியும் ஒரு நல்ல பதவியிலிருந்து இன்று ஓய்வு நிலையில் உள்ளேன்.

இவரிடமிருந்த கடவுள் பக்தியும் இயற்கையாகவே அமைந்த குரல் வளமும் சமூகத்தில் இவருக்கு பெருமதிப்பை

ஏற்படுத்தியது. சித்திரை அண்ணா மூலம் எனது மண்ணான ஆதிகோவிலடி பற்றியும் வல்வெட்டித்துறை பற்றியும் நிறைய தகவல்ளைப் பெற்றமை நான் எழுதிய எழுதப்போகின்ற பல வரலாற்றுத் திரட்டுக்களுக்கு பேருதவியாக உள்ளன. இவரது இளமைக்காலத்தில் இவர் பல பாடல் கோஷ்டிகளில் இணைந்து பாடல்கள் பாடி பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். இவரது கம்பீரமான கவர்ச்சித் தோற்றத்தில் மயங்கி பல (சின்னமேளப்) பெண்கள் காதல் வசப்பட்டு இவருக்காக ஏங்கி ஏமாந்து போன கதைகள் பல உண்டு.

இன்று வல்வெட்டித்துறை மக்கள் வாழும் இடமெல்லாம் அம்மன் திருவிழாவை கொண்டாடுகிறார்கள். இதில்வரும் 12ம் திருவிழாவில் நடைபெறும் புலிவிளையாட்டு நிகழ்வு இவரது தந்தையாரான அப்பாத்துரையால் 1958ல் ஆரம்பிக்கப்பட்டது இதன் வரலாற்றையும் தோற்றத்தையும் சித்திரை அண்ணா எனக்கு கூறியுள்ளார். இது பற்றி பிறிதொரு இடத்தில் பேசலாம்.

இவர் திருமண பந்தத்தில் ஈடுபட்டதால் திருமலையில் வாழ்ந்து வந்தபோதும் ஆதிகோவிலடியையும் வல்வை முத்துமாரி அம்மனையும் நினைவு கொண்டு வாழ்ந்து வந்தார். பல வானொலி நிழ்ச்சிகளில் இவரது கலைப்படைப்புக்கள் ஒலிபரப்பாகி உள்ளன பல இசை இறுவெட்டுக்கள் வெளியிடப்பட்டள்ளன. ஆதிவைரவர் கோவிலில் இவரது பக்திப் பாடல்கள் வெள்ளிக்கிழமை தோறும் ஒலிப்பரப்பாகும். ஒரு அண்ணவியார் எதையெல்லாம் சாதிக்க முடியுமோ அதையெல்லாம் சாதித்துள்ளார். ஆனாலும் வசதியுடன் வாழ அவருக்கு ஆண்டவன் வழிவிடவில்லையென்றே கூறவேண்டும். இருந்தும் கௌரவமாக மற்றோரால் மதித்துப் போற்றப்படக்கூடிய வண்ணம். வாழ்ந்து கௌரவமாக இறைபதம் அடைந்துள்ளார்.

அண்ணவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக ஆதிகோவிலடி வாழ் உறவுகளுடன் நானும் வல்வையலிருந்து வந்திருந்தேன். ஒருவரது பெருமை புகழ், மக்கள் பால் அவர் கொண்ட பற்று என்பவற்றை குறித்தவருடைய இறுதி

ஊர்வலத்தில் தெரியும் என்பார்கள். அந்த வகையில் அங்கு நான் கண்ட உறவினர்கள், ஊரவர்கள், படித்தவர்கள், நிறுவனங்கள் திணைக்களங்களின் பிரதிநிதிகள் மற்றும் அவரது ரசிகர்கள் பக்தர்கள் என்போரது ஜனக்கூட்டம் என்னை பிரமிக்க வைத்தது.

இத்தகவல்களை நான் எழுதிக் கொண்டிருக்கும் போது 'Valvettithurai.org" எனும் இணையத்தளத்திலும் ஒரு செய்தியை படிக்க முடிந்தது. (இச் செய்தி இம்மலரில் இணைப்பாக உள்ளது) ஒருமனிதன் மஹாத்மா காந்தியாகவோ புத்தபிரானாகவோ வாழவிட்டாலும் சாதாரண மனிதனாக மற்றவர் போற்றும் வகையில் வாழ்ந்தால் போதும். அவ்வகையில் அண்ணாவின் வாழ்வு சமூகத்திற்கு ஒரு மறக்க முடியாத முன்னோடியாக அமைந்துள்ளமை எமக்கு ஒரு பாடமாகும்.

இவர் ஒரு பரம்பரை ஞானியாகவோ அன்றி கவிஞனாகவோ இருக்கவில்லை. ஆண்டவன் இவருக்கு கொடுத்தவரமே இவரை இந்நிலைக்காக்கியது. **எனது மனநெருடல் யாதெனில் இவரது மகனோ, பேரப்பிள்ளைகளோ அண்ணாவின் அதாவது அண்ணாவியாரின் வழிதொடர முயற்சிப்பார்களா?...**

வல்வெட்டித்துறை மக்கள் சார்பிலும் சிறப்பாக ஆதிகோவிலடி உறவுகள் சார்பாகவும் சித்திரை அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்துக் கொள்வோமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**ந.சிவரத்தினம்**
**ஆதிகோவிலடி ஜெயம் - வல்வெட்டித்துறை**
**ஓய்வு நிலை**
**உதவிப் பொதுமுகாமையாளர்**
**இலங்கை வங்கி**

## உலகளாவிய ரீதியில் சித்திர வேலாயுதத்திற்கு கிடைத்த புகழ்

### இணையத்தளமான valvettithurai.org யில் வெளியான செய்தி

வீரம் சொரிந்த மறவர்களும், வீரத்தின் முத்துக்களும் பிறந்து வாழ்ந்த எம் மண்ணில் மேலும் பெருமை சேர்க்க ஆள்த்தான கலைஞர்களும், அறிவு மிக்க தலைவர்களும், ஆழ்கடல் வென்றெடுத்த வீரம்மிக்க கடலோடிகளும், பல்கலைக்கழகம் செல்லாது பட்டம் பெற்று பெருமை சேர்க்கும் அண்ணாவிமார்களும், வந்த வழியில் எமது ஊரின் பெருமையை கட்டியம் கூறுவதைப்போல் அண்ணாவியார் அப்பாத்துரை சித்திரவேலாயுதம் அவர்களின் பசுமையான நிகழ்வுகள் எமது நெஞ்சில் மறக்கமுடியாத நினைவுகளாக இருக்கின்றன.

அன்னாரின் அற்புதமான கலைப்படைப்பும், ஆழமான குரல் வளமும், அழகான உடுக்கின் அசைவும், சொல்ல முடியாதவை. அந்த நாட்களில் அவருடைய படைப்பாக ஆரியமாலா திருமணம் என்ற பெயரில் காத்தவராயன் கூத்தையும் அதே இடத்தைச் சேர்ந்த அண்ணாவியர் இளையதம்பி அவர்களின் காத்தவராயன் என்ற பெயரில் தன்னுடைய படைப்பாகவும் நடத்துவார்கள். இவர்கள் இருவராலும் நடத்தப்படுகின்ற காத்தவராயன் கூத்தானது மிகவும் போட்டியாகவும், தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி மிகவும் திறம்படச் செய்வார்கள்.

சித்திரவேலாயுதம் அவர்களால் நடத்தப்படுகின்ற கூத்தனது மாலை 06.00 மணிக்கு ஆரம்பமாகி காலையில் சூரியன் உதயமாகின்ற வரை ஒவ்வொரு சட்டங்களாக வடிவமைத்து, பாத்திரங்களுக்கு ஏற்றவாறு ஆட்களைத் தெரிவு செய்வதில் மிகவும் திறமை படைத்தவர்.

அவருடன் மிகவும் திறமை வாய்ந்த கலைஞர்களாக சிவப்பிரகாசம் அண்ணா, தேவராசா, மணி, ராசா, பரஞ்சோதி

மற்றும் பல கலைஞர்களின் நடிப்புத் திறமையால் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக அமைந்தது.

இவரின் திறமையால் நடத்தப்படும் காத்தவராயன் கூத்தில் சித்திரவேலாயுதம் அவர்கள் பற்பல பாத்திரங்களில் நடித்தாலும், பிற்பகுதியில் வருகின்ற காத்தவராயனாக நடிக்கின்ற நடிப்பும், மிடுக்கான நடையும், கம்பீரமான குரலும், பேசுகின்ற வசனமும் சொல்லில் அடங்காதவைகள்.

மேலும் அவரின் கரகப் பாட்டும், உடுக்கில் இருந்து எழுகின்ற நாதமும் அம்மன் கோயிலில் பாடலை பாடத்தொடங்கினால் ஆதிவைரவர் கோயிலில் இருப்பவர்களுக்கு அந்த ஓசை கேட்கும். அவ்வளவிற்கு அவரின் குரலில் இருந்து எழுகின்ற சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும்.

இப்படி திறமை மிக்க கலைஞர்களின் மறைவு பாரிய இழப்பாகும். இனிமேல் இப்படி ஒரு கலைஞர் வருவார்கள் என்பது இந்தக் காலகட்டத்தில் ஒரு கேள்விக் குறியாகத்தான இருக்கும். இத்தனை திறமை மிக்க ஆசான்களை வாழும்போதே வாழ்த்தி கௌரவிக்கவில்லை என்ற ஆதங்கம் என்னைப்போல் சிறு கலைஞர்களுக்கும் அவர் சம்பந்தப்பட்ட மக்கள் செய்யவில்லை என்ற கவலையும் என் மனதில் இருக்கின்றது. இனிமேல் ஆவது திறமை மிக்கவர்களை வாழும் போதே வாழ்த்தி கௌரவிப்போம் என்ற சிந்தனையோடு ...

அன்னாரி மறைவுக்கு ஆழ்ந்த கவலையும், கண்ணீர் அஞ்சலியையும் செலுத்தி நிறைவு செய்கின்றேன் .

**வல்வை சிகாமணி**
(குண்டையா)

## ஆதிகோவிலடி மண்ணின் புகழ்வளர்த்த பெருமகனே சித்திரை வேலாயுதம்

இயற்கை எய்திய எமது ஊர் கலாபூஷணம் அப்பாத்துரை சித்திரைவேலாயுதம் அவர்களின் மரணம் கேட்டு அதிர்ச்சியில் உறைந்து போனேன். அம்மன் கரகப் பாடல்கள் பாடுவதிலும் பக்தி பாடல்கள் பாடுவதிலும் மற்றும் தேவாரங்கள் பாடுவதிலும் மற்றும் தேவாரங்கள் பாடுவதிலும் அவருக்கு நிகர் வேறு எவருமே இருக்க முடியாது. அதே போல் 30க்கு மேற்பட்ட மேடைகளில் புராண நாடகமாகிய காத்தவராயன் நாடகத்தை மேடை ஏற்றி அண்ணாவியராகவும் கதாபாத்திரம் ஏற்று நடித்தும் பெரும் புகழ் படைத்தவர். அண்மையில் வெளிவந்த ஈழத்து கிராமிய தெய்வீக காவடி சிந்துகள் CDயில் எமது ஆதிவைரவரை பற்றிய இவரது பாடல் எமது நெஞ்சங்களில் அழியாப் புகழ் பெற்றுவிட்டது. அன்னாரது பக்திப் பாடல்கள் வெள்ளிக்கிழமை தோறும் காலையில் எமது தேவஸ்தானத்திலிருந்து ஒலிபரப்பப்படுவதையும் அதனால் பக்தர்கள் ஆதி வைரவரை மனங்கொண்டு பரவசப்படுவதையும் இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும். அன்னாரின் இழப்பு எமக்கும் எமது ஊர் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆதி வைரவப் பெருமானை வேண்டி நிற்கிறோம்.

மேலும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆலயத்தின் சார்பிலும் எனது சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

**மு.ஞானரெத்தினம்**
**தலைவர்**
**ஆதிவைரவர் தேவஸ்தானம்**
**ஆதிகோவிலடி**
**வல்வெட்டித்துறை**

# விழிநீர் அஞ்சலி

மலர்வு
1942 - 04 - 30



உதிர்வு
2015 - 11 - 08

## " கிராமிய இசைத்திலகமும், அண்ணாவியாருமான"

## "கலாபூஷணம்" அமரர். அப்பாத்துரை சித்திரவேலாயுதம்

கலகலக்கும் பேர்செங்கே
கலைதவழும் விழிகளெங்கே
விலகித்தான் போயினவோ
வேதனையால் துடிக்கின்றோம்

கண்களெல்லாம் குளமாச்ச
கலைத்தென்றல் பிரிந்ததனால்
விண்கல்புவிதனில் மோதி
வெடித்ததுபோல் கலங்குகின்றோம்

வல்வை நகர்தனிற் பிறந்து
வண்டமிழர் தலை நகிற்
சல்லியம்பதி யமர்ந்து
சாதனைகள் புரிந்தவரே

குரலில் மயங்கி நின்றோம்
கூத்துக்கள் பருகி நின்றோம்
விரலின் அடவுகளில்
உடுக்கோசை பேசக் கண்டோம்

கலைகள் பயிற்றுவித்தாய்
கலைத்தாய்க்குச்சேவை செய்தாய்
இளைய தலைமுறைக்கு
எழுகதிராய் பயன்கொடுத்தாய்

எங்கள் பதிசிறக்க
எழுந்து வந்த செழுங்கதிரே
இன்றெங்கோ போயினையே
இதயம் ஒப்ப மறுக்கிறதே

உங்கள் இசை கேட்டு
உயிர்ப்படைந்த எம் செவிகள்
எங்கே இனிக்கேட்கும்
உன்னிசை போல் இன்னிசையை

எல்லாம் முடிந்ததுவோ
எம்சிறப்பும் குலைந்ததுவோ
நல்லோன் உன்னிழப்பால்
நலமனைத்தும் பிரிந்தனவோ

நிறைவான வாழ்க்கைதனை
நீணிலத்தில் வாழ்ந்தவரே
இறைபாதம் அமர்ந்திருக்க
எல்லோரும் வேண்டுகின்றோம்

கண்ணீரால் விடை கொடுத்தோம்
கரம் குவித்து வணங்குகின்றோம்
விண்ணேகும் பெரியவரே
என்றும் எம்மனத்திருப்பீர்!.

துயரத்துடன்
சல்லியம்பதி வாழ் மக்கள்

சக்தி அச்சகம் — திருக்கோணமலை

# நன்றிகள்

**அமரர் அப்பாத்துரை சித்திரவேலாயுதம்** மறைவு கேட்டதும் எமது இல்லத்திற்கு ஓடோடி வந்து சகல விதத்திலும் உதவியும் ஒத்தாசையும் ஆறுதலும் அளித்த எமது அயலவர்கள், சொந்தங்கள், வல்வை உறவுகள், அலுவலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், அனுதாபிகள் ஆகியோருக்கும்,

அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், மலர் வளையங்கள், பதாதைகள், அஞ்சலிகள் செலுத்தியோருக்கும் எமது துயருக்கு தோள்கொடுத்து பல வழிகளிலும் பேரதவி செய்த கடல்கடந்த நாடுகளில் வாழும் இரத்த உறவுகள், அனுதாபிகள் ஆகியோருக்கும்.

கனடா, லண்டன் போன்ற நாடுகளில் பல இடங்களில் எமது குலவிளக்கின் நினைவுக் கூட்டங்களை சிறப்பாக ஏற்பாடு செய்து நிகழ்த்திய இரத்தங்கள், உற்றார், சான்றோர் ஆகியோருக்கும், ஈமக்கிரியை, வீட்டக்கிருத்தியம், மற்றும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் இம்மலரை சிறப்புற பதிப்பிப்பதில் முன்னின்று உழைத்த உறவுகளுக்கும் பதிப்பகத்தாருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றியறிதலை இத்தால் சமர்ப்பிக்கின்றோம். இவ் நினைவஞ்சலியை முக்கியமாக பதிப்பு செய்ய வேண்டும் என எண்ணிய திரு நடராஜா வடிவேல் (இராசகிளி-இராசரத்தினம்) எமது நெருங்கிய உறவினர் டென்மார்க்கில் இருந்து இப்பதிப்புக்கான முழுச் செலவுகளையும் ஏற்றுக் கொண்டு தனது பாசத்தையும் அண்ணாவியாரின் மதிப்பிற்கும் இடம் கொடுத்து போற்றியமையை நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.


நன்றி

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

இங்ஙனம்
குடும்பத்தினர்.

**Guru Printers**, *Adiyapatham Road, Thirunelvely.*

## அமரரின் முன்னோக்கிய வம்சாவளி
## வல்லியப்பர் முருகுப்பிள்ளை (1830)



வாழும்போது வாழ்த்துவோம் என்னும் நிகழ்ச்சி திருமலையில் 12.10.2014 தரிசனம் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட போது அண்ணாவியார் சித்திரைவேல் கௌரவிக்கப்பட்டதை காட்டும் சில காட்சிகள்







வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் வீதியில் சித்திரை 2011ல் திரு இரா.மதியழகன் அவர்களினால் அரங்கேற்றப்பட்ட காத்தவராயன் கூத்து மேடையில் அண்ணாவியார் அப்பத்துரை சித்திரவேலாயுதம் அவர்களை சிறப்பாக கொண்ட ஏனைய கலைஞர்கள் கௌரவிக்கப்பட்ட காட்சி

